# இஸ்லாமிய கண்ணோட்டத்தில் தாராண்மைவாத பெண்ணியல் வாதம் : தர்க்கரீதியான சவால்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

Nusrath Banu. M[1], Sharmina.A.M.F[2]

Deparment of Sociology[1], Deparment of Islamic Studies[2], South Eastern University of Sri Lanka
mnusrathbanu1@gmail.com[1], fathimashrmy@gmail.com[2]

**ஆய்வுச்சுருக்கம்**

சமூகத்தில் காணப்படக்கூடிய பல்வேறு கருத்தியல்களில் ஒன்றான பெண்ணியல் வாத சிந்தனையானது சமூகத்தில் பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் நோக்கோடு தோற்றம் பெற்றது. அவற்றில் 18 ம் நூற்றாண்டில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் தோன்றிய பெண்ணிலைவாத கருத்துக்கள் தாராண்மை பெண்ணிலைவாதம் எனும் பிரிவிலடங்கும். தாரண்மை பெண்ணியல்வாதம் என்பது பெண்ணிய சிந்தனையில் ஒரு வலுவான அரசியல் நீரோட்டமாக காணப்படுவதோடு, அது சுதந்திரம், சமத்துவம்,பெண்களின் தனிப்பட்ட மற்றும் அரசியல் ரீதியான சுயாட்சியை பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்தவகையில் பெண்ணியல் வாதம் குறித்தும் பெண்ணியல்வாதிகள் குறித்தும் பல்வேறு ஆய்வுகள், பல்வேறு கண்ணோட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளன. அவற்றில் இவ்வாய்வானது Mary Wollstonecraft உடைய தாராண்மை பெண்ணியல் வாத கருத்துக்களை இஸ்லாமிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்த வகையில், ஆய்வுலகில் Mary Wollstonecraft உடைய கருத்துக்கள் இஸ்லாமிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் பெரும்பாலும் நோக்கப்பட வில்லை.எனவே ஆய்வுலகில் காணப்படும் இடைவெளியை நிரப்புவதை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.இது ஒரு பண்பு ரீதியிலான ஆய்வாகும். இதற்காக வேண்டி இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டன. அந்த வகையில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள், இணையதளங்கள், புத்தகங்கள் போன்றவற்றிலிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவை தொகுத்தறி முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.இந்த ஆய்வின் மூலமாக தாராண்மை பெண்ணியல் வாதம் பற்றிய Mary Wollstonecraft உடைய பெரும்பாலான கருத்துக்கள் இஸ்லாத்தின் பெண்கள் தொடர்பான கருத்துக்களோடு பெரும்பாலும் ஒத்துப்போகும் தன்மையையும் சிலநேரங்களில் வரையறையுடன் ஒத்துப்போகும் தன்மையையும் கொண்ட பெண்ணியல்வாத கருத்தாக காணப்பட்டதனை அவதானிக்க முடிந்தது.இவ்வாறான பெண்ணியல் வாத கருத்துக்கள் இஸ்லாமிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் பார்க்கப்படுவதன் மூலம் எதிர்கால உலகில் பெண்களை வலுப்படுத்தி, பெண்களின் செயற்பாடுகளை வினைத்திறனாகவும் விளைத்திறனாகவும் ஆக்கிக் கொள்வதன் மூலம்,உலகில் கணிசமான தொகையினராக

காணப்படும் பெண்களின் மூலமும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு இவ்வாய்வு காலத்தின் தேவையாக காணப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்**: தாராளவாத பெண்ணியம்,Mary Wollstonecraft, இஸ்லாமிய கண்ணோட்டம், பெண்ணுரிமை.

## ஆய்வு அறிமுகம்

கருத்தியல் எனும் சொல் முதலில் பிரெஞ்சுப் புரட்சியில் உருவாகிப் பின்னர் பலவகைப் பொருள் மாற்றங்களை அடைந்த ஒன்றாகும். கருத்தியல் என்பது ஒரு நபர் உலகைப் பார்க்கும் விதம் சமூகவியல் துறையில், ஒரு நபரின் மதிப்புகள், நம்பிக்கைகள், அனுமானங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளின் மொத்தத் தொகையைக் குறிக்கும் சித்தாந்தம் என பரவலாக புரிந்து கொள்ளப்படுகிறது. இந்தவகையில், பல்வேறுபட்ட காலப்பகுதிகளிலும் உலகில் மதம், புவியியல், தத்துவம், சமூகம், அரசியல், பொருளாதாரம் என பல்வேறு துறைகளிலும் பல கருத்தியல்கள் தோற்றம்பெற்றன. அதில் சில வலுவிழந்துவிட்டதுடன், இன்னும் சில இன்றும் காணப்படுகின்றன. இந்தவகையில், அரசியலிலும் பல கருத்தியல்கள் தோற்றம் பெற்றது. அவற்றில் சில கருத்தியல்கள் பரவலாகவும், இன்னும் சில கருத்தியல்கள் சிறிய அளவிலும் மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இந்தவகையில், மிகமுக்கியமான அரசியல் கருத்தியல்களாக தாராண்மை வாதம், முதலாளித்துவம், மார்க்சிஸம், பாஸிசம், குடியரசு வாதம்,சமூக ஜனநாயக வாதம், தேசிய வாதம், மதசார்பின்மைவாதம், பெண்ணிய வாதம் போன்றவற்றை அடையாளப்படுத்தப்படுகின்றன.இவற்றில் பெண்களுக்கெதிரான வகையில் ஆணுக்கான சமூக அங்கீகாரம் , ஆணாதிக்க மனோபாவம் என்பன தீவிரம் பெற்ற சூழ்நிலையில் இவற்றை எதிர்த்து தோற்றம் பெற்றதே பெண்ணியமாகும். இவ்வகையில் எழுச்சி பெற்ற பெண்ணியவாத இயக்கத்திலும் சிந்தனையிலும் தாராண்மை பெண்ணியல் வாதம், சமவுடைமை பெண்ணியல் வாதம் , தீவிர ( Redical ) பெண்ணியல் வாதம், பின்நவீன பெண்ணியல் வாதம் , பின் காலனித்துவ பெண்ணியல் வாதம் என பிரதான 5 துறைகள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் பெண்களுக்கான விடுதலை,அரசியல் மற்றும் சமூக ரீதியான உரிமைகள்,சமத்துவம்,விசேட ஏற்பாடுகள் போன்ற அம்சங்கள் வழியுறுத்தப்படுகின்றன (Naseem, 2019).

இவற்றில் இங்கு நாம் பார்க்கப் போவது தாரண்மை பெண்ணியல்வாதம் பற்றியதாகும். அதாவது தாரண்மை பெண்ணியல்வாதம் என்பது பெண்ணிய சிந்தனையில் ஒரு வலுவான அரசியல் நீரோட்டமாக காணப்படுகின்றது . சுதந்திரம், சமத்துவம் போன்றவற்றில் கவனம் செலுத்துவதோடு, பெண்களின் தனிப்பட்ட மற்றும் அரசியல் ரீதியான சுயாட்சியை பாதுகாப்பதும் இதன் நோக்கமாக காணப்பட்டது. 18ம் நூற்றாண்டில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் தோன்றிய பெண்ணிலைவாத கருத்துக்கள் தாராண்மை பெண்ணிலைவாதம் எனும் பிரிவிலடங்கும். பிரான்சிய புரட்சி, அமெரிக்க விடுதலைப்புரட்சி என்பன சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இந்த சுதந்திரம் அப்போது ஆண்களுக்கு மட்டுமே உரித்தானது. பெண்களுக்கு இச்சுதந்திரம் மறுக்கப்பட்டது. ஏனெனில் பெண்ணுக்கு பகுத்தறிவு குறைவு, பெண்ணானானவள் பெண் எனும் அடிப்படையில் நோக்கப்படுகிறாள் பின்புதான்

மனிதன் என்று நோக்கப்டுகிறாள். இதனால் தாராண்மை பெண்ணிலைவாதத்தின் பிரதான கருத்து ''பெண்ணும் ஆணைப்போல் ஒரு தனி நபர், அவள் ஆணின் போகப்பொருள் அன்று, பெண் ஆணைச்சார்ந்து வாழும் நிலையையும் மீறி அவளுக்கு தனி மனித உரிமை, சுதந்திரமும் தேவை'' என்பதாகும் (Begum,2016).தாராளவாத பெண்ணியமானது, தொழில் புரியும் இடத்தில் சமத்துவம், மற்றும் அரசியல் ஆகிய விடயங்களிலும் அதிகம் கவனம் செலுத்துவதோடு ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையானது பொதுவான சமத்துவத்தை எவ்வாறு தடுக்கின்றது அல்லது எவ்வாறு மேம்படுத்துகிறது என்பது தொடர்பாகவும் கவனம் செலுத்துகின்றது.( (Lewis, n.d)

பெண்ணியல் சார்ந்த பல்வேறு கோட்பாடுகள் உலகில் தோன்றுவதற்கு சமூகத்தில் காணப்பட்ட பெண்களை இழிவுபடுத்தும் சமூக ,அரசியல், சாதாரண நடைமுறைகள், கட்டமைப்புகள் மற்றும் சமத்துவமின்மை என்ற பல்வேறு நடவடிக்கைகளையும் எதிர்க்கும் முகமாக மேலைத்தேய நாடுகளில் பெண்ணிலைவாத சிந்தனை 18ஆம் நூற்றாண்டளவில் தோற்றம் பெற்றன (Abdullah, 2021). எனினும் நவீன உலகிலும் பெண்களுக்கெதிரான நடைமுறைகளும் பாகுபாடுகளும் பல்வேறு இடங்களில் நடைபெற்ற வண்ணமே உள்ளன. இதற்காக வேண்டி பல்வேறு சமூகவியல் அறிஞர்கள் பெண்கள் பற்றியும் பெண்களுடைய உரிமைகள் பற்றியும் பல்வேறு காலகட்டங்களில் குரல் கொடுத்து வந்துள்ளமையை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

தாராளவாத பெண்ணியம் பற்றி பேசிய பல்வேறு நபர்களை எமக்கு வரலாற்றின் ஊடாக கண்டுகொள்ள முடியுமாக உள்ளது.உதாரணமாக Betty Friedan,Harriet Taylor Mill, John Steuart Mill, Mary Wollstonecraft போன்ற பலரையும் குறிப்பிடலாம். அவர்களில் ஒரு முக்கிய புள்ளியாக காணப்படும் Mary Wollstonecraft பார்க்கும் போது ,Mary Wollstonecraft (1759- 1797) ஒரு புகழ்பெற்ற, பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்த நபர்களில் ஒருவராவார். அவர் பெண்களைப் பற்றியும் சமூகத்தில் பெண்களுக்கு காணப்படுகின்ற அந்தஸ்து பற்றியும் ஆராய்ந்தார். பெண்களும் மனிதர்களே, அவர்களுக்கு சம வாய்ப்புகள் ,சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று வாதிட்டார்.இவர் எழுதிய முக்கியமான இரண்டு கட்டுரைகளான A Vindication of the Rights of Man (1790), மற்றும் A Vindication of the Rights of Woman (1792) இரண்டும் மிகவும் புகழ்பெற்றவனவாக காணப்படுகின்றன. பெண்களும் மனிதர்களே, அவர்கள் பாலியல் நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்தப்பட கூடியவர்கள் அல்ல என்றும் வாதிட்டார்.இவர் தன்னுடைய பல்வேறு கருத்துக்களினூடாகவும் பெண்களின் உரிமைகள் பற்றி அதிகம் பேசுபவராக காணப்பட்டார (Brooklyn Museum ,n.d).

எவ்வாறாயினும், இஸ்லாம் பெண்கள் பற்றி நோக்கும் விதமும் பெண்களுக்கு வழங்கும் உரிமைகளும் இவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தன்மையை கொண்டுள்ளது. இஸ்லாமிய சட்டமானது முழு மனித வாழ்க்கைக்குமான வழிகாட்டல்களை தன்னகத்தே கொண்டுள்ளது.அது மனித வாழ்வின் அத்தனை துறைகளுக்கும் தேவையான அனைத்து விதமான வழிகாட்டல்களையும் வழங்குகின்றது. அந்த வகையில் இஸ்லாம் பெண்களுக்கு உரிய கண்ணியத்தையும் உரிமைகளையும் வழங்கும் மார்க்கமாக உள்ளது. ஆண்களுக்கு

உள்ள உரிமைகள் போன்று அவர்களுக்கும் உரிமைகள் உண்டு என்பதை அல்லாஹ் அல்குர்ஆனிலும் சுட்டிக் காட்டுகின்றான் (Minsara,2014). நவீன உலகில் இஸ்லாத்தின் மூலாதாரங்களான அல் குர்ஆன் மற்றும் அல்ஹதீஸ் ஊடாக பெண்களுக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் பூரணமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக இஸ்லாமியப் பெண்ணியம் எனும் கருத்தியல் முன்வைக்கப்டுகிறது . மேற்கத்தேய பெண்ணியல் சிந்தனைகள் ஆண் , பெண் ஆகியோருக்கு இடையில் பால் வேறுபாடின்றி அனைத்து விடயங்களிலும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் எனும் அடிப்டையைக் கொண்டு அமையப்பெற்றிருப்பினும் இஸ்லாமிய பெண்ணிய சிந்தனையானது பெண்களின் இயல்புகளுக்கு ஏற்ற உரிமைகள் முறையாக அவர்களுக்கு கிடைக்கப்பெற வேண்டும் என்பதையே தனது பிரதான இலக்காக கொண்டமைந்துள்ளது (Abdullah, 2021).

அந்தவகையில் இவ்வாய்வானது சமூகவியல் அறிஞர்களுடைய பெண்ணியம் தொடர்பான கருத்துக்களில் Mary Wollstonecraft உடைய கருத்துக்கள் இஸ்லாம் கூறும் பெண்களின் நிலை பற்றிய கருத்துக்களுடன் எப்படி தொடர்பு கொள்கின்றது என்பதை ஆராய கூடிய ஒரு முயற்சியாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

தாராளவாத பெண்ணியம் தொடர்பான கருத்துக்களில் Mary Wollstonecraft உடைய கருத்துக்கள் இஸ்லாத்துடன் இணைந்து செல்கின்றதா அல்லது இஸ்லாத்திற்கு முரண்படுகின்றதா அல்லது அது குறித்த இஸ்லாமிய கண்ணோட்டம் என்ன என்பதை அலசி ஆராய்வதாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

பெண்ணியம் என்ற சொல்லானது அதனை கேட்கும்போதே சமூகத்திற்கும் இஸ்லாத்திற்கு முற்றிலும் எதிரான ஒரு சொல்லாக கருதப்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் பெண்ணியம் பற்றிப் பேசக்கூடிய சில அறிஞர்களுடைய கருத்துக்கள் மிதமான போக்கில் காணப்படுவதோடு , அவை இஸ்லாத்துடன் ஒத்துப் போகக் கூடிய தன்மையையும் அவதானிக்க முடிகின்றது. ஆனால் பெண்ணியம் தொடர்பான கோட்பாடுகள் பற்றிய மேலோட்டமான அறிவுடையவர்களால் பெண்ணியம் எனும் வார்த்தையை வைத்து அவை ஒதுக்கப்படும் போக்கை அவதானிக்க முடிகின்றது.பெண்ணியம் தொடர்பான சில கருத்துக்கள் இஸ்லாத்திற்கு சாதகமாக அமைந்த போதிலும் அவை இலைமறைக் காயாகவே காணப்படுகின்றன என்பதே எமது ஆய்வு பிரச்சினையாகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது ஒரு பண்பு ரீதியிலான ஆய்வாகும். இதற்காக வேண்டி இரண்டாம் நிலை தரவுகள் பயன்படுத்தப்பட்டன. அந்த வகையில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள், இணையதளங்கள், புத்தகங்கள் போன்றவற்றிலிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு அவை தொகுத்தறி முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

M.N.Nishniya Musthakeema (2018) என்பவரால் **"இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பாரதியின் பெண்ணியக் கருத்துக்கள்"** என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆய்வாளர், பெண்ணியம் என்பது ஆண் பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் கோட்பாடாகும் என்றும், அடக்கி ஒடுக்கப்பட்ட அன்றைய இந்தியப் பெண்களின் நிலையால் உருவான சிந்தனைகளும் அதில் விளைந்த எதிர் மனோநிலைகளும் பாரதியின் எழுத்துக்களில் பெண்ணியக் கருத்துக்கள் தோன்றக்காரணமாயின என்றும், பாரதி, தன் காலத்து பெண்களின் அடக்கி ஒடுக்கிய நிலைகண்டு எழுதிய கருத்துக்கள், அவரால் முன்வைக்கப்பட்ட பல பெண் விடுதலைக்கூறுகளும் தீர்வுகளும் பலவகையிலும் நவீனமடைந்த இன்றுவரை ஏட்டளவிலே உள்ளன என்றும், ஆனால் இஸ்லாம் 1400 வருடங்களுக்கு முன்னரே பெண்கள் உரிமை தொடர்பாக பேசுவிட்டது என்றும், அவை பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டதோடு நின்றுவிடாது செயற்படுத்தியும் காட்டப்பட்டதோடு மறுக்கும் பட்சத்தில் இஸ்லாம் அதற்கான தண்டனைகளையும் கூறுகின்றது என்றும்,பெண்விடுதலைக்காய் முற்போக்காய் செயற்பட்டவர்களுள் பாரதியே தமிழர்கள் மனதில் நின்று நிலைப்பதனாலேயே பாரதியின் கருத்துக்களோடு இஸ்லாமிய பெண்ணுரிமைக் கருத்துக்களை ஆராய வேண்டியதாயிற்று என்றும் குறிப்பிட்டுள்ளார்.

Farhat Nisar மற்றும் Aasia Rashid (2018)ஆகியோர் மேற்கொண்ட **"Women And Feminism: A Discourse Analysis Of Contemporary Theories And Islamic Teachings"** எனும் ஆய்வில், பெண்ணியம் மற்றும் பெண்ணுரிமை,இஸ்லாம் மற்றும் பெண்ணியம், இஸ்லாத்தில் பெண்களுடைய நிலை மற்றும் பெண்ணியம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள், நவீனத்துவம் மற்றும் பெண் விடுதலை தொடர்பாக மேற்கின் கண்ணோட்டம் , நாகரீகங்களின் வரலாற்றில் பெண்கள் மீது இடம்பெற்ற ஒடுக்குமுறைகள், அல்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் பார்வையில் பாலினங்களுக்கு இடையிலான நீதி, போன்ற பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

Ahmad Muhyuddin Hassan,Zulkiflee Haron மற்றும் Mansoureh Ebrahimi ஆகியோர் மேற்கொண்ட **"Islamic Feminism from A Liberal Muslim Perspective"** எனும் ஆய்வு, மேற்கு நாடுகளில் இருக்கக்கூடிய மாறுபட்ட முஸ்லிம் சமூகங்களில் வாழக்கூடிய பெண்களின் நிலைப்பாடு பற்றிய புரிதலை அடிப்படையாகக் கொண்டு


ISBN 978-624-5736-14-0

மேற்கொள்ளப்பட்டது.இதில் தாராளவாத முஸ்லிம் பெண்ணியவாதிகள் சாட்சியமளித்தல், சொத்துப் பெறுதல் போன்ற இன்னும் பல்வேறு சூழ்நிலைகளிலும் சமவாய்ப்பு பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கருதுகின்றனர் என்றும் ,இன்னும் இவ்வாய்வில் பெண்ணிலைவாதிகளின் பங்குகள் குறித்தும், தாராண்மைவாத கண்ணோக்கில் இஸ்லாமிய பெண்ணியவாதம் குறித்தும், தாராண்மை முஸ்லிம் பெண்ணியத்தின் செயற்பாடுகள் மற்றும் அணுகுமுறைகள் குறித்தும் பேசப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

Lena Salaymeh என்பவரால் மேற்கொள்ளப்பட்ட **"Imperialist Feminism and Islamic Law"** எனும் ஆய்வில், ஏகாதிபத்திய பெண்ணியம் தொடர்பான குறைபாடுகள் பற்றி பேசப்பட்டுள்ளது. ஏகாதிபத்திய பெண்ணியவாதிகள் மேற்கத்திய பெண்களை முஸ்லிம் பெண்களுடன் ஒப்பிடக்கூடிய முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்றும், ஏகாதிபத்திய பெண்ணியவாதிகள் முஸ்லிம் பெண்களை மாறுபட்ட ஆணாதிக்க பார்வை மூலம் பார்க்கிறார்கள் என்றும்,ஏகாதிபத்திய பெண்ணியவாதிகள் முஸ்லிம் பெண்களின் நடைமுறைகளை மதிப்பிடும்போது, ஏகாதிபத்திய பெண்ணியவாதிகள் , மேற்கத்திய பெண்கள் முழுமையான சுயாட்சியை அனுபவிக்கின்றனர் என்று கருதுவதாகவும், எல்லா இடங்களிலும் பெண்கள் சுயாட்சியை அனுபவிப்பதில்லை என்பதை அங்கீகரிக்கத் தவறிவிட்டார்கள் என்றும்,பேசப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

M.M.A. Abdullah(2021) என்பவர் எழுதிய **"இஸ்லாத்தில் பெண்கள் உரிமைகள்: ஒரு கோட்பாட்டு ரீதியிலான பார்வை"** எனும் ஆய்வில்,இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்கள் 1400 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டிருப்பினும் நவீன உலகில் பெண்களின் உரிமைகள் பூரணமாக உத்தரவாதப்படுத்தப்படுவதற்கான சீரிய வழிகாட்டல்களை இஸ்லாம் வழங்கியுள்ளது என்பதோடு ஆரம்பகால முஸ்லிம் சமூகத்தில் பெண்கள் அவற்றை அனுபவித்தும் வந்துள்ளனர் என்பது இவ்வாய்வின் பிரதான கண்டறிதல்களாகும். மேலும் இவ்வாய்வில் ஆண் பெண் சமத்துவம் தொடர்பான இஸ்லாத்தின் கருதுநிலை, இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள ஆன்மீக, சமூக,பொருளாதார, அரசியல் உரிமைகள் மற்றும் இன்னும் பல்வேறு உரிமைகளை இஸ்லாம் வழங்கியுள்ளது என்றாலும் இஸ்லாம் வழங்கும் இவ்வுரிமைகளில் பொது நலனையும் பெண்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு சில வரையறைகளை இஸ்லாம் வித்தித்துள்ளதாகவும்,இவை தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்கள் , நடைமுறைகள் என்பன தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றதாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

பெறப்பட்ட இரண்டாம் நிலை தரவுகளின் அடிப்படையில் Mary Wollstonecraft இனுடைய பெண்ணியம் தொடர்பான பிரதான கருத்துக்களை பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

- பெண் என்பவள் பொருளாதாரரீதியாக சுதந்திரமானவனாக காணப்படவேண்டும்.
- பெண்கள் வீட்டிலிருந்து வெளியே சென்று தமக்குத் தேவையானவற்றைத் தாமே சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.,பெண்கள் வீட்டிற்கு உள்ளேயும் வீட்டுக்கு வெளியேயும் வேலை செய்யக் கூடியவர்கள்.
- சமூகத்தில் நிலவும் பாகுபாடுகளை நீக்குவதற்காக சமமான கல்வி வாய்ப்புக்களை பரிந்துரை செய்தல்.
- சமூகத்தில் பெண்களுக்கும் சமத்துவம் நிலவ வேண்டும்
- ஒரு தாயாகவும் ஒரு மனைவியாகவும் பெண்களுக்கு பல்வேறு பொறுப்புகள் காணப்படுகின்றன.
- ஆனாலும் பெண்கள் இன்னொரு நபருக்கு அடிமையாக வருதல் கூடாது.

Mary Wollstonecraft உடைய இக்கருத்துகளை இஸ்லாமிய கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து பார்க்கும்போது,

**பெண் என்பவள் பொருளாதாரரீதியாக சுதந்திரமானவனாக காணப்படவேண்டும்.**

Mary Wollstonecraft முன்வைக்கக்கூடிய பெண்களுக்கு பொருளாதார ரீதியாக சுதந்திரம் காணப்படுதல் வேண்டும் எனும் கருத்து தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடு தொடர்பாக ஆராயும் பொழுது,

இஸ்லாம் சுதந்திரமான செயற்பாடு, பரஸ்பர கூட்டுறவு, ஒத்துழைப்பு தனிப்பட்டவர்களது சேவைகள், பணிகளின் பரஸ்பரப் பரிமாற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் தனது பொருளாதாரக் கோட்பாட்டை வகுத்துள்ளது. இந்த பொருளாதார அமைப்பில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் உரிமைகளை இஸ்லாம வழங்கியுள்ளது (Mohamed, 2012). அந்த வகையில் இஸ்லாம் ஆண்களுக்கு பொருளாதாரம் சார் உரிமைகளை வழங்கியிருப்பது போலவே பெண்களுக்கும் அவ்வாறான உரிமைகளை வழங்கியிருக்கிறது. இதனைப் புரிந்து கொள்வதன் மூலம் பெண்கள் தொழில் புரிவது தொடர்பான நிலைப்பாட்டை சரியாகப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் தொழில் புரிதல், சம்பாதித்தல் என்பது பொருளாதாரத்தோடு தொடர்புபட்டது. எனவே, பொருளாதார உரிமைகள் தொடர்பான அடிப்படைகளை விளங்கிக் கொள்வதனூடாக இது பற்றிய தெளிவைப் பெற முடியும். (Agar, 2015)

"ஆண்களுக்கு, அவர்கள் சம்பாதித்த(வற்றில் உரிய) பங்குண்டு (அவ்வாறே) பெண்களுக்கும், அவர்கள் சம்பாதித்(வற்றில் உரிய) பங்குண்டு" (4:32) இது போல இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமை சம்பந்தமாக அல்குர்ஆனில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுது. ஹதீஸும் அது தொடர்பான பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியுள்ளது என்பது முக்கியமான அம்சமாகும்.

ஆனாலும் தொழில் புரிதல் தொடர்பாக இஸ்லாம் காட்டும் வழிமுறைகளை பெண் கவனத்திற் கொள்ள வேண்டும். ஆண்களின் தேவையற்ற கவனம் ஈர்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் பெண்கள் அடக்கமான முறையில் செயற்பட தவறும் போது சமூகத்தில் பல்வேறு பாதிப்புக்களை சந்திக்க நேரிடும் (Shabir,n.d). இன்னும் Mary Wollstonecraft முன்வைக்கக்கூடிய இக்கருத்துக்களுக்கான இஸ்லாத்தின் பார்வையை

பார்க்கும்பொழுது மேற்கூறப்பட்ட பொருளாதாரம் சார்ந்த உரிமை எந்த அளவு பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கியுள்ளது என்பதை மிகத் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

**பெண்கள் வீட்டிலிருந்து வெளியே சென்று தமக்குத் தேவையானவற்றைத் தாமே சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.பெண்கள் வீட்டிற்கு உள்ளேயும் வீட்டுக்கு வெளியேயும் வேலை செய்யக் கூடியவர்களாக காணப்பட வேண்டும்.**

Mary Wollstonecraft முன்வைக்கக்கூடிய இக்கருத்தை இஸ்லாத்தின் பார்வையில் நோக்கும்போது,இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் வீட்டுக்கு வெளியே பல்வேறு துறைகளிலும் மிளிர்ந்துள்ளார்கள். எந்தளவுக்கெனில் போர்க்களம், த.ஃ.வாப் பணிகள், வியாபாரம் என்று பல்வேறு துறைகளிலும் பெண்கள் பங்கு கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு வரலாற்றில் சஹாபாப் பெண்கள் தங்களது வீட்டுப் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றிக் கொண்டே பல்வேறு துறைகளிலும் பங்கு கொண்டுள்ளனர். இது போன்றே ஒரு பெண் தொழில் செய்வதற்காக வீட்டை விட்டு வெளியேறிச் செல்வதையும் இஸ்லாம் பெண்களுக்கு அனுமதித்துள்ளது. நபி(ஸல்) அவர்களது காலத்திலுள்ள பெண்கள் தொழில் செய்வதற்காக வீட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார்கள் என்பதை வரலாற்றில் காணமுடிகிறது (Thaaniya,n.d).

தாதுந்நிதாகைன் என்று கூறப்படும் அபூபக்ர் (றழி) அவர்களது மகள் அஸ்மா (றழி) அவர்கள் தனது கணவர் சுபைர் இப்னுல் அவ்வாம் (றழி) அவர்களுடன் தொழிலைச் செய்ய பக்கபலமாக இருந்தார்கள். மதீனாவில் இருந்தது சில கிலோமீட்டர் தொலைவில் அவருக்குச் சொந்தமான நிலமொன்றிருந்தது. அங்கு அஸ்மா(றழி) அவர்கள் நடந்து சென்று வருவார். தனது குதிரைக்கு உணவு கொடுப்பதற்காக விதைகளை இடித்து தயார்படுத்துவார். இன்னும் சில பெண்கள் வீட்டுக்கு வெளியே வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம் 2182)

இன்னும்,ஒரு பெண் வளரும் போது ஒரு முஸ்லிம் பெண் அவளுக்கான தொழிலை தேர்ந்தெடுக்கும் உரிமையை பெறுகிறாள்.நபி (ஸல்) அவர்களுடைய காலத்திலும், அதற்கு பின்னரும் பெண்ணானவள் வழிபாட்டு அம்சங்களிலும், யாத்திரைகளிலும் கலந்து கொள்ளக் கூடியவளாக, கற்றல் மற்றும் கற்பித்தல் முயற்சிகளில் ஈடுபடுபவளாக, தொழிலில் ஈடுபடக் கூடியவளாக பொதுப் பிரச்சினைகள் (அரசியல் வாழ்க்கை)யில் பங்கு கொள்ளக் கூடியவளாக,தேவைப்படும் போது போர்க்களத்திலும் கலந்து கொள்பவளக காணப்பட்டாள;.(Safdar,n.d).இஸ்லாத்தில் பெண்களுக்கு தொழில் செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது பற்றி கலாநிதி ஷெய்பா ஷெரிஷ் ஷாம்லி கூறுகையில் இஸ்லாம் பெண்களுக்கு வேலை செய்வதற்கான உரிமையை வழங்கியுள்ளது என்று குறிப்பிடுகின்றார். (Naja et al., 2018)

இஸ்லாம் ஆண் மற்றும் பெண் ஆகியோருக்கிடையிலான தன்மைகளை அடிப்படையாக கொண்டு அவர்களுடைய பொறுப்புக்களை வேறுபடுத்தி காட்டுகின்றது.பெண்கள் தங்களுடைய இயல்புகளுக்கு ஏற்ப கற்பித்தல், மருத்துவம், சமூகப் பணி, வணிகம் போன்ற தேவையான மற்றும் பொருத்தமான வேளைகளில் ஈடுபட முடியும்.அதற்கான உரிமை


ISBN 978-624-5736-14-0

அவர்களுக்கு காணப்படுகின்றது. ;.(Safdar,n.d).உமர் ரழி அவர்கள் சியா பின்த் அப்துல்லாஹ் என்ற பெண்ணை தலைநகரில் உள்ள சந்தையின் பரிசோதகராக நியமித்தார் என இப்னு ஹஜர் குறிப்பிட்டுள்ளார்.(யெதய) இன்னும் மற்றுமொரு ஆதாரமாக, ஜைனப் ரழி அவர்கள் கைத்தொழில் செய்து தான் தயாரித்த பொருட்களை விற்று அதன் மூலம் கிடைத்த வருமானத்தை அதிகம் ஸதக்கா செய்பவர்களாக இருந்தார்கள்.(அல் ஹாகிம்:6776)

இந்த வகையில் ஒரு பெண் தொழில் புரிய வீட்டை விட்டு வெளியேறிச் செல்வது அடிப்படையில் (முபாஹ்) ஆகுமான ஒரு விடயமாகும். சில சந்தர்ப்பங்களில் சமூகத்தில் பெண்கள் தொழில் செய்வதற்கான தேவையும், அவசியமும் காணப்படுவதால் இந்த உரிமையை இஸ்லாம் பெண்களுக்கு குர்ஆன், சுன்னா நிழலில் வழங்கியுள்ளது. எனவேதான் ஒரு பெண் தொழில் நிமித்தம் வெளியேறிச் செல்வதாயின் ஷரீஅத் கூறும் நிபந்தனைகளைப் பேண வேண்டும் (Thaniya,n.d). அதாவது பெண்ணின் இயல்பு பாதுகாக்கப்பட வேண்டும், குடும்பம் , மார்க்கம், சமூகம் பாதிக்கப்படக் கூடாது, பெண்ணின் நலன் பாதிக்கப்படக்கூடாது போன்ற பல்வேறு விடயங்களையும் கருத்திற் கொள்ளுதல் அவசியமாகும் (Naja et al., 2018). எவ்வாறாயினும் பெண்கள் வீட்டிலிருந்து வெளியே சென்று தமக்குத் தேவையானவற்றைத் தாமே சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி பேசும்போது ஒரு முக்கிய விடயத்தை கவனத்தில் கொண்டாக வேண்டும். அதாவது,

மேற்குலகைப் பொறுத்தவரை தொழில் பெண்ணுடைய ஆயுதம்தான். ஆனால், தூய இஸ்லாமிய அடிப்படைகள் பேணப்படுகின்ற ஒரு சமூகத்தில் தொழிலானது பெண்ணுடைய ஆயுதமல்ல. அத்தகைய சூழலில் வாழ்கின்ற பெண்ணுக்கு தொழில் செய்ய வேண்டிய, சம்பாதிக்க வேண்டிய எந்தவொரு அவசியமும் ஏற்படப் போவதில்லை.பெண்ணைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பும் சமூகத்தைச் சார்ந்தது. குறிப்பாக, சமூகத்திலுள்ள ஆண்களைச் சார்ந்தது. இன்னும் தெளிவாகச் சொன்னால் பெண் என்பவள் இஸ்லாமிய சமூகத்தில் அதிதி(Guest) உடைய நிலையில் வைத்து நோக்கப்படுகின்றாள் (Agar, 2015).பெண்ணைக் கவனிக்க சட்ட ரீதியாக கடப்பாடுள்ளவர்கள் ஆண்களேயாவர்.இது பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு வாய்பாகவே காணப்படுகிறது.

**சமூகத்தில் நிலவும் பாகுபாடுகளை நீக்குவதற்காக சமமான கல்வி வாய்ப்புக்களை பரிந்துரை செய்தல்.**

சமூகத்தில் நிலவக்கூடிய பாகுபாடுகளை நீக்குவதற்காக வேண்டி ஆண் பெண் இருபாலருக்கும் கல்வி வாய்ப்புக்கள் சமமான முறையில் வழங்கப்பட வேண்டும் என்று Mary Wollstonecraft குறிப்பிடக்கூடிய கருத்து தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டை பார்க்கும் போது,

கல்வியையும், அறிவையும் தேடிப்பெறுவதில் ஆண்களுக்கு இருக்கும் அத்தனை உரிமைகளும் பெண்களுக்கும் உண்டு. கல்வியையும், அறிவையும் முஸ்லிம்கள் அவசியம் தேடிப்பெற்றிட வேண்டும் என இஸ்லாம் கட்டளை இட்டபோது அது ஆண், பெண் இருபாலருக்குமிடையே எந்த பாகுபாட்டையும் பாராட்டவில்லை. இருபாலரையும் இணைத்தே

கூறியுள்ளது. இன்றிலிருந்து சுமார் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு முஸ்லிமான ஆணும், பெண்ணும் கல்வியையும், அறிவையும் பெற்றிட வேண்டிய கடமை உள்ளவர்கள் எனத் தெளிவுபடுத்தினார்கள். இப்படி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெளிவுபடுத்தி அறிவுறுத்தியதை முஸ்லிம்கள் முழுமையாகச் செயல்படுத்திக் காட்டினார்கள்.

இன்னும், ஆரம்ப காலப்பகுதிகளில் கல்விசார்ந்த பல்வேறு துறைகளில் பெண்கள் ஈடுபட்டு வந்தமைக்கான சான்றுகளினூடாக பெண்களுக்கான கல்விசார்ந்த உரிமைகள் நடைமுறையில் இருந்து வந்தமையை அறிய முடிகிறது (Abdhullah,2021).கல்வி உரிமையைப் பற்றி பேசும் போது இஸ்லாம் வலியுறுத்துவது போன்று வேறு எந்த சமயமும் மதமும் வலியுறுத்துவதில்லை. அதாவது இஸ்லாம் ஆண் பெண் இருபாலாரையும் எந்தவித வேறுபாடுமின்றி கல்வி கற்பதற்கு தூண்டுகின்றது. இவ்வாறு கல்வியை கட்டாயப்படுத்தும் இஸ்லாம் அதன் மூலம் கிடைக்கக் கூடிய அறிவை ஏனையோருக்கும் பயன்படுத்த கூடிய வகையில் நடைமுறைப்படுத்த வழிகாட்டுகின்றது. (Musthakeema, 2018).

ஒருவர் மரணித்து விட்டால் அவருடைய அனைத்து நல் அமல்களும் துண்டிக்கப்பட்டு விடும். மூன்று விடயங்களை தவிர, 1. நிலையான தர்மம் 2. பயனளிக்கக்கூடிய அறிவு, 3.தனக்காகப் பிரார்த்திக்கும் பிள்ளைகள். (முஸ்லிம்:3358),”அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் ” ( இப்னு மாஜா) இவை மாத்திரம் அன்றி,இஸ்லாமிய வரலாற்றில் முக்கிய அறிஞர்களுள் ஒருவரான இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி அவர்கள் இறைதூதரின் தோழர்களின் வரலாற்றைத் தொகுத்த ” அல் இஸாபா ” எனும் நூலில் 1500 க்கு மேற்பட்ட நபித்தோழியர்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார் . அவர்களில் பலர் இஸ்லாமிய சட்டத்துறை , ஹதீஸ் துறை மற்றும் இலக்கியத்துறை போன்ற பல்வேறு துறைகளில் ஆழ்ந்த புலமை கொண்டவர்களாவர். (Abdullah, 2021) இன்னும் இஸ்லாமிய வரலாற்றில் பல்வேறு சஹாபி பெண்மணிகள் கல்வித் துறையில் சிறந்து விளங்கியமை இஸ்லாம் ஆண் பெண் இருபாலாருக்கும் சமமான கல்வி வாய்ப்பையே வழங்கியுள்ளது என்பதை நிறுவுவதற்கு போதுமான வரலாற்று ஆதாரங்களாகவும் காணப்படுகின்றன.

இன்னும் அன்னை ஸ.ஃபியா அவர்களுக்கு இஸ்லாமிய மார்க்க ஞானத்தில் பெரும் புலமை இருந்தது அவர்களுடைய காலத்தில் மிகச் சிறந்த மார்க்க அறிவு பெற்ற பெண்மணியாக அவர் விளங்கினார் என்று அவரைப் பற்றி இமாம் நவவீ குறிப்பிடுகிறார்.,இவர்களைப்போன்றே கல்வியிலும் கேள்வியிழும் சிறந்து விளங்கிய இன்னொருவர் அன்னை உம்மு ஸலமா (ரழி) ஆவார். அவரிடம் மட்டும் 32 மார்க்க அறிஞர்கள் மாணவர்களாக பயின்றுள்ளனர் என்ன அல்லாமா இப்னு ஹஜர் ரஹ்மத்துல்லாஹி குறிப்பிடுகிறார்..ஃபாத்திமா பின்த் கைஸ் (ரழி) அவர்களைப் பற்றியும் வரலாற்றில் ஒரு குறிப்பு காணக் கிடைக்கின்றது ஒருமுறை ஏதோ ஒரு பிரச்சினையில் அவருக்கும் ஆயிஷா (ரழி) மற்றும் உமர் (ரழி) அவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது நாள் முழுக்க விளக்கியும் பாத்திமாவை ஒப்புக்கொள்ள வைக்க அவர்கள் இருவராலும் இயலவில்லை.புலம்பெயர்ந்து சென்ற தொடக்ககால முஹாஜிர்களில் பாத்திமாவும் ஒருவர் விசாலமான அறிவு பார்வை உடையவர் என அவரைப் பற்றி இமாம் நவவி கூறியுள்ளார்கள். இது போன்று பல்வேறு அம்சங்களும் இஸ்லாம் கல்வியில் சமனான

வாய்ப்பையே ஆண் பெண் இருபாலாருக்கும் வழங்குகின்றது என்பதும், அதன் மூலம் சமூகத்தில் அறிவு ரீதியில் பாகுபாடு நிலவுவதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை என்பதும் தெளிவாகின்றது.

**சமூகத்தில் பெண்களுக்கும் சமத்துவம் நிலவ வேண்டும்.**

சமூகத்தில் எவ்வித வேறுபாடுகளும் இன்றி ஆண் பெண் இருபாலாருக்கும் மத்தியில் சமத்துவம் நிலவ வேண்டும் என்று இவர் குறிப்பிடுகின்றார். இக்கருத்தை இஸ்லாத்தின் பார்வையில் நோக்கும்போது,

இஸ்லாமிய சட்டமானது ஒரு மனிதனை இனம், நிறம், தேசியம், வர்க்கம் என எந்த ஒரு வகையிலும் வேறுபடுத்தி நோக்காது.இஸ்லாம் பெண்களுக்கு ஆண்களுக்குச் சமமான கண்ணியத்தையும், வாய்ப்புகளையும் தருகின்றது, அதேநேரத்தில் இந்த இருபாலரும் ஒரே மாதிரியானவர்கள் எனக் கூறுகின்றது. இது இஸ்லாம் பெண்களின் அகத்தன்மைகள் அனைத்தையும் மனதில் கொள்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது ( (இஸ்லாத்தில் பெண்களின் உயர்வான நிலை,2014). இன்னும், இஸ்லாம் ஆண்,பெண் சமத்துவம் தொடர்பில் தெளிவாக சிந்தனைப்போக்கை கொண்டுள்ளதோடு பெண்களுக்கான ஆன்மீக சமூக , பொருளாதார மற்றும் அரசியல் சார்ந்த பல்வேறு உரிமைகளையும் அவர்களின் இயல்புகளைக் கவனத்தில் கொண்டு பூரணமாக வழங்கியுள்ளது (Abdhulla,2021).

இஸ்லாம் ஆண்களுக்கு வழங்கும் அதே உரிமையை பெண்களுக்கும் வழங்குகின்றது.ஆகவே, ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, யார் ஈமான் கொண்டவர்களாக நற்கருமங்கள் செய்கிறார்களோ, அவர்கள் சுவனபதியில் நுழைவார்கள் இன்னும் அவர்கள் இம்மியேனும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள் (அல்குர்ஆன் 4:124). இது பெண்கள் பற்றிய இஸ்லாத்தின் சுருக்கமான கண்ணோட்டமாகும் (Musthakeema, 2018).ஆண் , பெண் ஆகிய இருவரும் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் இறைவனின் படைப்புக்கள் மற்றும் அவர்கள் இருசாராரும் ஒருவர் மற்றவரின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கிலேயே படைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அல்குர்ஆன் கூறுகிறது. ,

“அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான் பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்” (அல்குர்ஆன் 4:1)

“அல்லாஹ்வின் பார்வையில் அனைத்தும் மனிதர்களும் சமனானவர்களே,அனைவருக்கும் சமானன உரிமைகள் காணப்படுகின்றன. அல்லாஹ் அல்குர்ஆனில், ”மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம் நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம் (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழந்து) தெரிந்தவன்.(49:13) ” (Safdar,n.d).


ISBN 978-624-5736-14-0

"ஆகவே, ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, யார் ஈமான் கொண்டவர்களாக நற்கருமங்கள் செய்கிறார்களோ, அவர்கள் சுவனபதியில் நுழைவார்கள் இன்னும் அவர்கள் இம்மியேனும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்."(4:124) , " பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்)தில் ஆண்களுக்கு பாகமுண்டு அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பாகமுண்டு - (அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே"( 4:7)

எனவே இவற்றின் மூலம் சமத்துவம் பற்றி அதிகம் பேசும் மார்க்கமாக இஸ்லாம் காணப்படுகிறது என்பதும் அது மாத்திரமன்றி சமத்துவத்தை சமூகத்தில் இஸ்லாம் நிலைநாட்டி வந்துள்ளதென்பதும் ஆதாரப்பூர்வமாக நிரூபணமாகின்றது.

**ஒரு தாயாகவும் ஒரு மனைவியாகவும் பெண்களுக்கு பல்வேறு பொறுப்புகள் காணப்படுகின்றன.**

**ஆனாலும் பெண்கள் இன்னொரு நபருக்கு அடிமையாக வருதல் கூடாது.**

Mary Wollstonecraft பெண்களுடைய பொறுப்புகள் பற்றி குறிப்பிடும்பொழுது பெண்கள் தங்களுக்கு உள்ள பொறுப்புகளை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும் எனினும் அவர்கள் ஒருவர் மற்றொருவருக்கு அடிமையாக இருத்தல் கூடாது என்ற கருத்தை இவர் வலியுறுத்துகின்றார். இக்கருத்து பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டை பார்க்கும் பொழுது

ஒரு பெண் வீட்டில் மிகவும் பொறுப்பு வாய்ந்தவளாக காணப்படுகின்றாள். வீட்டைக் கவனிப்பது, கணவனை மகிழ்விப்பது, அமைதியும், அன்பும், பாசமும் நிறைந்த மகிழ்ச்சிகரமானதொரு குடும்பத்தை உருவாக்குவது என்பன பெண்ணின் அடிப்படைப் பணிகளாகும். இது பற்றி நபி(ஸல்) அவர்கள் "" ஒரு பெண் தனது கணவனின் வீட்டிற்கும் அவனது குழந்தைகளுக்கும் பொறுப்புதாரியாவாள். அவர்கள் அனைவர் பற்றியும் அவள் மறுமையில் விசாரிக்கப்படுவாள்" ( ஆதாரம் புஹாரி : 893 ) என்று கூறியதிலிருந்து வீட்டில் பெண்களின் பொறுப்பு எவ்வளவு முக்கியமானது என்பது தெரியவருகின்றது (Thaniya,). இன்னும் இஸ்லாம் பெண்களைப் பற்றி குறிப்பிடும் போது அவளை ஒரு மனைவியாகவும், ஒரு தாயாகவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிறப்பித்து பேசுவதனை அவதானிக்க முடிகின்றது.

இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே உவப்பையும், கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும் ( 30:21)

"பெண்கள் ஆண்களின் உடன்பிறப்புக்களாவர் " ( அபூ தாவூத் , 236 )எனும் நபிமொழியானது ஆண் , பெண் ஆகிய இருபாலாரும் உடன் பிறப்புக்களைப் போன்ற சம அந்தஸ்து உடையவர்கள் என்ற கருத்தை உணர்த்துகிறது . அத்தோடு தாயின் காலடியில் சுவனம் இருப்பதாகவும் ( நஸாஈ , 3104 ) - , உலகில் அதிகம் தோழமை கொள்ளத் தகுதியானவர்களில் முதல் மூன்று இடங்களும் தாய்க்கு வழங்கப்பட்டு நான்காவது இடமே தந்தைக்கு வழங்கப்பட்டிருப்பாதாகவும் ( புகாரி , 5971 ˙ முஸ்லிம் , 2548 ) குறிப்பிடும்

ஹதீஸ்களின் ஊடாக பெண்களின் தனித்துவத்தை கவனத்தில் கொண்டு ஆண்களை விட உயர்ந்த அந்தஸ்தும் அவர்களுக்கு வழங்கப்ட்டுள்ளது என்ததையும் அறிய முடிகிறது (யடினாரடடய). இன்னும் , ஒரு பெண்ணுக்கு வீட்டில் இருந்து குழந்தைகளை வளர்க்கவும் முடியும் அதே போல தொழிலில் ஈடுபடவும் முடியும்.அவள் தொழிலை தேர்ந்தெடுத்தால் அவளுடைய சம்பாத்தியத்தை தனக்கு வைத்துக் கொள்ளும் உரிமை அவளுக்கு காணப்படுகிறது .அவளுடைய கணவன் வீட்டை நிதி ரீதியான நிர்வாகிக்க கடமைப் பட்டுள்ளான்.இன்னும் வீட்டுப் பொறுப்புகளில் கணவன் மனைவி இருவரும் இணைந்து செயற்பட வேண்டும்.அவர்கள் அதில் சமனானவர்கள். ஒருவர் மற்றவருக்கு அடிமைப் பட்டவர் அல்ல (Shabir,n.d ).

இவ்வாறு இஸ்லாம் பெண்களை பற்றி பல்வேறு இடங்களில் அவளுடைய பொறுப்புகளையும் கடமைகளையும் எடுத்துக்காட்டுகின்றது. ஆனால் அது எதுவும் பெண்களை அடிமைகளாக சித்தரித்து காட்டவில்லை. மாறாக அவற்றை எடுத்துக் காட்டுவதன் ஊடாக பெண்களை சிறப்பித்து பேசும் போக்கு இஸ்லாத்தில் காணப்படுகின்றது.

ஆகவே மேற்குறித்த விடயங்களை தொகுத்து நோக்கும் போது Mary Wollstonecraft கூறக் கூடிய பெரும்பாலான கருத்துக்கள் இஸ்லாத்தின் பார்வையோடு ஒத்துப் போகும் போக்கை அவதானிக்க முடியுமாக உள்ளது. எனினும் இஸ்லாம் அதனை நோக்கக் கூடிய கண்ணோட்டத்திலிருந்தும் வேறுபட்டமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

தாராளவாத பெண்ணியம் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடிய சமூகவியல் அறிஞர்களில் ஒருவரான Mary Wollstonecraft உடைய கருத்துக்கள் பெண்களுக்கான சம வாய்ப்பு களையும், பொருளாதார ரீதியான உரிமைகளையும் ,கல்வி உரிமைகளையும் , இன்னும் பெண்களுடைய பொறுப்புக்களையும் சுட்டிக் காட்டக்கூடிய வகையில் அமையப் பெற்றிருக்கின்றன.இவருடைய கருத்துக்கள் இஸ்லாத்தோடு ஒத்துப் போகக்கூடிய தன்மையில் இருந்தாலும் அது இஸ்லாத்தின் கருத்துகள் அனைத்திலும் ஒத்துப் போகக்கூடிய தன்மையிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றது. காரணம், இஸ்லாம் ஏற்கனவே வழங்கிய உரிமைகளை இவர்கள் பெண்ணுரிமை என்ற பெயரில் கேட்டு அதற்காக போராடக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும்.இன்னும் இஸ்லாம் பெண்களுடைய விடயம் தொடர்பாக கையாளக்கூடிய வழிமுறைகள் இவருடைய கருத்துக்களின் படி நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்று வினா இங்கு முக்கியமாக எழுப்பப்படுகின்றது. காரணம் இவர்கள் முன்வைக்கக்கூடிய அனைத்து கருத்துக்களும் ஒரு பெண்ணுடைய இயல்புகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு முன்வைக்கப்பட கூடிய சந்தர்ப்பங்கள் இஸ்லாத்தின் பார்வையினின்றும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இஸ்லாம் அதன் உருவாக்கத்தில் பெண்களுக்கான உரிமைகளை வழங்கி விட்டது. பெண் உரிமை தொடர்பான இஸ்லாத்தின் கருத்து மிக தெளிவாகவும் விளக்கமாகவும் எக்காலத்திற்கும் பொருத்தமானதாகவும் காணப்படுகின்றது. இஸ்லாம் பெண்களுக்கு உரிமைகளை வழங்கும் போது அவை அவர்களுக்கு அநீதீ இழைக்கப்படாத வகையிலும்

அதேநேரம் பெண்களுடைய தன்மைகளை கருத்திற் கொண்டும் அவர்களுக்கு நலனை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமையப் பெற்றுள்ளன. அதனை இஸ்லாத்தின் மூலாதாரங்கள் ஊடாகவும் இஸ்லாமிய வரலாற்றின் ஊடாகவும் தெட்டத்தெளிவாக கண்டுகொள்ள முடிகின்றது.

**கண்டறில்களும் பரிந்துரைகளும்**,

1. பெண்ணியம் என்ற சொல்லைக் கேட்டதும் அது தவறான எண்ணக்கரு ,முரண்பாடான அம்சங்களை கொண்டது போன்ற விளக்கத்தை பெருமை இயலாமல் அதிலும் சில சமூகத்திற்கு பிரயோசனமான தகவல்கள் இருக்கலாம் என்று கண்ணோட்டத்தோடு இது பற்றிய விளக்கத்தை பெற முயற்சி செய்தல் வேண்டும்.

2. சமூகத்தில் காணப்படக் கூடிய பெண்களுக்கு எதிரான அல்லது பெண்களை குறைத்து மதிப்பிட தக்கதான கருத்துக்கள், பழமொழிகள், கலாசார அம்சங்கள் போன்றனவற்றை இணங்கண்டு அவற்றைக் கலைத் தெரிய முயற்சித்தல் வேண்டும்.

3. பெண்களை கல்வியியல் ரீதியாக வலுவூட்ட கூடிய செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும்.

4. பொருளாதார ரீதியாக பெண்களை முன்னேற்றுவதற்கு அவர்களுக்கான சிறு கைத்தொழில் முயற்சிகள், வேலைவாய்ப்புக்கள் போன்றவற்றை இஸ்லாமிய வரையறைகளைப் பேணி செய்வதற்கு முடியும் என்பது தொடர்பான விழிப்புணர்வை மேற்கொள்ளல்.

5. இஸ்லாத்தின் பெண்களுக்கான ஆடை அமைப்பினை முறையாக பேனுவதன் ஊடாக இஸ்லாம் அனுமதித்துள்ள தொழில் முயற்சிகளில் ஈடுபட வழிகாட்டுதல்.

## References


Abdullah, M.M.A. (2021). Islāttil peṇkaḷiṉ urimaikaḷ: oru kōṭpāṭṭu rītiyilāṉa pārvai [Women's rights in Islam: a theoretical perspective]. Muallim Journal of Social Sciences and Humanities, 5(1), 84-99. https://doi.org/10.33306/mjssh/114

Agar M. (2015, March 15). *பெண்கள் தொழில் புரிதல்*. Puttalam Online. https://puttalamonline.com/2015-03-15/puttalam-other-news/80834/

Ali A. (2010). *பெண்ணியம் ஒரு மாற்றுப் பார்வை*. **என் கண்ணில்**!!. . https://aliaalifali.blogspot.com/2010/02/blog-post_4138.html?m=1

Begum A. (2012). *முஸ்லிம் பெண்களுக்கு கல்வி அவசியம்தான்!...* Jaffna Muslim. https://www.jaffnamuslim.com/2012/05/blog-post_919.html?m=1

Beily L. (2016). *Feminism, Liberal*. Research gate. https://DOI:10.1002/9781118663219.wbegss738

Hassan, A. M., Haron Z., & MEbrahimi M. (2020). Islamic Feminism from A Liberal Muslim Perspective. *UMRAN - International Journal of Islamic and Civilizational Studies*, *7*(3), 99-107. DOI:10.11113/umran2020.7n3.368

Jawaid M. (2021). *Male-female responsibilities and privileges in the modern era*. ResearchGate. https://www.researchgate.net/publication/265285699

Lewis, J. J. (2019). *What is liberal feminism?* ThoughtCo. https://www.thoughtco.com/liberal-feminism-3529177

M Naseem, M. S. (2019). *சமகால அரசியல் கருத்தியல்களும் அவற்றின் பொருத்தப்பாடுகளும்*. meesan edu. https://meesanedu.blogspot.com/2019/01/blog-post.html?m=1

*Mary Wollstonecraft*. (n.d.). Brooklyn Museum. https://www.brooklynmuseum.org/eascfa/dinner_party/place_settings/mary_wollstonecraft#:~:text=1759%2C%20London%2C%20England%3B%20d>treatise%20advocating%20equality%20for%20women

McAfee, & Katie b, N. K. (2018). *The Stanford Encyclopedia of Philosophy*. Metaphysics Research Lab.Stanford University . https://plato.stanford.edu/archives/win2018/entries/feminism-political

Meany P. (2020). *Mary Wollstonecraft: Individualist feminist, classical republican*. Libertarianism.org. https://www.libertarianism.org/columns/mary-wollstonecraft-individualist-feminist-classical-republican

Naja, W. F., Nafrin, M. B., & Nibras, K. M. (2018). *இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள பொருளாதார உரிமைகள் தொடர்பான நடைமுறைகளும், அவற்றைப் பெற்றுக் கொள்வதில் பெண்கள் எதிர் நோக்கும் சவால்களும்சம்மாந்துறை பிரதேசத்தின் : மலையடிக் கிராமம்01 ஐ மைய்யப்படுத்திய ஓர் ஆய்வு. SEUIR* Home. https://ir.lib.seu.ac.lk/handle/123456789/3430

Nisar F., & Rashid A. (2018). Women And Feminism: A Discourse Analysis Of Contemporary Theories And Islamic Teachings. *Al-Ilm*, *2*(2). http://religion.asianindexing.com/images_religion/7/74/Al-%CA%BFILM_2_1_8.pdf

Nishniya Musthakeema, M. N. (2018). *இஸ்லாமியக்கண்ணோட்டத்தில் பாரதியின் பெண்ணியக்கருத்துக்கள்.* SEUIR Home. https://ir.lib.seu.ac.lk/handle/123456789/3451

Riyaz Mohamed, M. S. (2012*). இஸ்லாம் முன்வைத்துள்ள மனித உரிமைகள் -03.* கல்வி வழி -Kalvi Vali. https://kalvivali.blogspot.com/2012/04/03.html?m=1

Salaymeh Salaymeh L. (2019). Imperialist Feminism and Islamic Law. *Journal of Women of the Middle East and the Islamic World*, *17*(2019), 97-134. https://www.academia.edu/download/61091849/15692086_017_02-03_s002_text_120191101-98089

Shabir G., & Safdar G. (n.d.). Human Rights and Women's Rights in Islam. *Research journal ulum-e-islamia* , 114-126. https://www.academia.edu/35448388/

Thaniya, A. H. (n.d.). *Dhlcm | Dharul Hudha | Maruthamunai*. DHLC – For Arabic and Islamic Studies. https://dhlcm.lk/dha1.html

*இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய கல்வி உரிமைகள்.* (2020). Why We Born. https://www.whyweborn.com/2020/04/02/%E0%AE%87%E0%AE%B8%E0%AF%8DE0%AE%B2%E0%AE%BE%E0%AE%AE%E0%AF%8D%E0%AE%AA%E0%AF%86%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%95%E0%AE%B3%E0%AF%81%E0%AE%95%E0%AF%8%E0%AE%95%E0%AF%81-%E0%AE%B5%E0%AE%B4%E0%AE%99-2/

*கருத்தியல் என்றால் என்ன? ஒரு சமூகவியலாளர் விளக்குகிறார்.* (2021). kyaaml. https://ta.kyaaml.org/ideology-definition-3026356-13592

*மின்சாரா J. (2014). இஸ்லாத்தில் மனித உரிமைகள்.* தென் கிழக்கு ஆய்வு மையம்.இலங்கை.